TAMIL

FECCA
Federation of Ethnic Communities' Councils of Australia

# புலம்பெயர்ந்த மற்றும் அகதிப் பின்னணி கொண்டவர்களுக்கான முதியோர் பராமரிப்பு சேவைகளை [Aged Care Services] மேம்படுத்துவது தொடர்பில் உங்களிடம் ஏதாவது யோசனைகள் இருக்கின்றனவா?

முதியோர் பராமரிப்புத் தரம் மற்றும் பாதுகாப்பு தொடர்பில் ஆராயும் ரோயல் கமிஷன் [Royal Commission into Aged Care Quality and Safety] உங்களிடமிருந்து அறிந்துகொள்ள விரும்புகிறது!



இது ஆஸ்திரேலிய சுகாதார அமைச்சின் நிதியுதவியுடன் மேற்கொள்ளப்படும் செயற்றிட்டமாகும்.



## 1. முதியோர் பராமரிப்புத் தரம் மற்றும் பாதுகாப்பு தொடர்பில் ஆராயும் ரோயல் கமிஷன் என்பது என்ன?

- நிறுவனங்கள் மற்றும் சேவைகள், முதியவர்களை எந்தளவு சிறப்பாக பராமரிக்கின்றன என்று ஆராய, 2018 அக்டோபர் மாதம் ஆஸ்திரேலிய அரசு, ரோயல் கமிஷனை [Royal Commission] அமைத்தது. ரோயல் கமிஷன் அரச சார்பின்றி சுயாதீனமாக இயங்குகிறது.
- என்னென்ன பிரச்சினைகள் உள்ளன, என்னென்ன சிறப்பாக செயல்படுகின்றன, மற்றும் எதிர்காலத்தில் ஏற்படும் மாற்றங்களுக்கான யோசனைகள் குறித்த தகவல்களை இந்த ரோயல் கமிஷன் முடிந்தவரை சேகரிக்க வேண்டும்.
- முதியோர் பராமரிப்பிலுள்ள பிரச்சினைகள் தொடர்பில் மக்கள் தெரிவித்தவற்றை விவரிக்கும் இடைக்கால அறிக்கையை ரோயல் கமிஷன் அக்டோபர் 2019-இல் வெளியிட்டது.
- முதியோர் பராமரிப்பை எவ்வாறு மேம்படுத்தலாம் என்பது தொடர்பில் மக்களின் யோசனைகளைப் பெற்றுக்கொள்ள ரோயல் கமிஷன் தற்போது விரும்புகிறது. உங்களிடம் ஏதேனும் யோசனைகள் இருந்தால் 2020 ஜூன் 30ம் திகதிக்கு முன்னர் தெரியப்படுத்த வேண்டும்.
- அதன் பின்னர் ரோயல் கமிஷன் 2020 நவம்பருக்கு முன் அரசிடம் தனது இறுதி அறிக்கையை சமர்ப்பிக்கும். இவ்வறிக்கையில் முதியோர் பராமரிப்பு துறையை மேம்படுத்துவதற்கான பரிந்துரைகள் உட்படுத்தப்பட்டிருக்கும்.
- ரோயல் கமிஷன் குறித்த மேலதிக தகவல்களை முப்பதுக்கும் மேற்பட்ட மொழிகளில் பெற்றுக்கொள்ள: https://agedcare.royalcommission.gov.au/about/Pages/other-languages.aspx

## 2. முதியோர் பராமரிப்பு தொடர்பில் நான் என்ன நினைக்கிறேன் என்பதை ரோயல் கமிஷனிடம் சொல்வது ஏன் முக்கியம்?

- புலம்பெயர்ந்த அல்லது அகதிப் பின்னணி கொண்ட சிலருக்கு, அல்லது ஆங்கிலம் நன்றாகப் பேசாதவர்களுக்கு, முதியோர் பராமரிப்பு சேவைகளை கண்டுபிடித்து பயன்படுத்துவது பெரும்பாலும் சிக்கலானதாகவும் கடினமாகவும் உள்ளதென்பதை ரோயல் கமிஷன் ஏற்கனவே கேட்டறிந்துள்ளது.
- தமது மத மற்றும் கலாச்சார தேவைகளை, சில நிறுவனங்கள் புரிந்துகொள்ளாதமை தொடர்பில், சிலர் எப்படி உணர்கிறார்கள் என்பதையும் ரோயல் கமிஷன் கேட்டறிந்துள்ளது.
- தற்போது ரோயல் கமிஷன், புலம்பெயர்ந்த அல்லது அகதிப் பின்னணி கொண்டவர்கள் அல்லது அவர்களது குடும்பத்தினர் மற்றும் நண்பர்களிடமிருந்து, முதியோர் பராமரிப்பு எதிர்காலத்தில் எவ்வாறு சிறப்பாக அமையலாம் என்பது தொடர்பில் அறிந்துகொள்ள விரும்புகிறது.
- ஆங்கிலம் நன்றாகப் பேசாத சிலர், தாம் என்ன நினைக்கிறார்கள் என்பதைக் கூறுவதற்கு சிரமப்படலாம் என்பதை ரோயல் கமிஷன் புரிந்துகொண்டுள்ளது.
- **இதனால்தான் மக்கள் தமது சொந்த மொழியிலேயே யோசனைகளைத் தெரிவிப்பதற்கு வசதியாக மொழிபெயர்த்துரைப்பவர்கள் அல்லது மொழிபெயர்ப்பாளர்களை பணிக்கமர்த்தவுள்ளது.**
- **நீங்கள் நினைப்பதைச் சொல்ல உங்களுக்கான வாய்ப்பு இது! இதைச் செய்ய பலரும் முன்வந்தால், சிறந்த முதியோர் பராமரிப்பு அனைவருக்கும் சாத்தியமாகும்.**



# 3. முதியோர் பராமரிப்பை மேம்படுத்துவது குறித்த எனது யோசனைகளை ரோயல் கமிஷனுக்கு நான் எப்படிக் கூறலாம்?

- உங்களது யோசனைகளை ஆங்கிலத்திலோ அல்லது உங்களது சொந்த மொழியிலோ, தொலைபேசி வழியாக அல்லது எழுத்து மூலம் அல்லது ஒலிவடிவில் அல்லது காணொளியாக பகிர்ந்துகொள்ளலாம்.
- உங்களது பெயர், முகவரி அல்லது தொலைபேசி இலக்கத்தை அவர்களிடம் கொடுக்கத் தேவையில்லை. உங்களது மொழி என்னவென்பதை அவர்களிடம் கூறவேண்டும். அத்துடன் உங்கள் பெயர் மற்றும்/அல்லது முகவரியை பொதுவெளியில் பகிர விரும்பவில்லையெனில் அதனையும் குறிப்பிடுங்கள்.
- குடும்ப உறுப்பினரோ அல்லது நண்பரோ உங்களுக்கு உதவலாம். நீங்கள் என்ன சொல்ல விரும்புகிறீர்கள் என்பதை அவர்களிடம் கூறினால், உங்கள் சார்பில் அவர்கள் ரோயல் கமிஷனைத் தொடர்புகொள்வார்கள்.



- நீங்கள் தொலைபேசியில் அழைக்கலாம் 1800 960 711.
- உங்களுக்கு ஒரு மொழிபெயர்த்துரைப்பவர் தேவையெனில் ரோயல் கமிஷன் அதற்கு ஏற்பாடு செய்யும்.
- மொழிபெயர்த்துரைப்பவர் நீங்கள் என்ன சொன்னீர்கள் என்பதை ஆங்கிலத்தில் எழுதிக்கொள்வார். **இந்தச் சேவை இலவசமானது.**
- பின்னர், தான் எழுதிக்கொண்டது சரிதானா என்று உறுதிப்படுத்துவதற்காக, மொழிபெயர்த்துரைப்பவர் உங்களைத் தொடர்புகொள்வார்.



- நீங்கள் ஒரு கடிதமோ அல்லது மின்னஞ்சலோ அனுப்பலாம்.
- உங்களது தகவல் இலகுவானதாகவும் சுருக்கமானதாகவும் இருக்கலாம்.
- உங்களது சொந்த மொழியிலேயே நீங்கள் அதனை எழுதலாம்.
- நீங்கள் என்ன எழுதியிருக்கிறீர்கள் என்பதை ஒரு மொழிபெயர்ப்பாளர் ஆங்கிலத்திற்கு மொழிபெயர்ப்பார். இச்சேவை இலவசமானது.
- உங்களது கருத்தை தபால் மூலம் அனுப்ப:
  Royal Commission, GPO Box 1151, Adelaide, South Australia, 5001
  – மின்னஞ்சல் வழியாக அனுப்பிவைக்க:
    ACRCenquiries@royalcommission.gov.au
- உங்களது யோசனைகள் கிடைத்ததும் உங்கள் மொழியிலேயே உங்களுக்கு தெரியப்படுத்துவார்கள்.



- யாரேனும் ஒருவரின் உதவியுடன் உங்களுடைய கருத்தை உங்களுடைய மொழியிலேயே பதிவுசெய்யலாம்(ஒலி அல்லது காணொளி).
- ஒலிப்பதிவு 25MB-க்கு மேற்படாமல் இருக்க வேண்டும். அதனைவிட பெரிதாக இருந்தால் பல பகுதிகளாக அனுப்பலாம்.
- நீங்கள் என்ன சொல்லியிருக்கிறீர்கள் என்பதை ஒரு மொழிபெயர்ப்பாளர் ஆங்கிலத்திற்கு மொழிபெயர்ப்பார். இச்சேவை இலவசமானது.
- உங்கள் ஒலிப்பதிவை மின்னஞ்சல் வழியாக அனுப்பிவைக்க:
  ACRCenquiries@royalcommission.gov.au
  – தபால் மூலம் அனுப்ப:
    Royal Commission, GPO Box 1151, Adelaide, South Australia, 5001
- ஒலிப்பதிவு கிடைத்ததும் உங்கள் மொழியிலேயே உங்களுக்கு தெரியப்படுத்துவார்கள்.



சிலர் தம்மிடம் தெரிவித்த கருத்துக்களை ரோயல் கமிஷன் தமது இணையத்தளத்தில் பிரசுரிக்கக்கூடும்.

- உங்களுக்கு அதில் விருப்பமில்லை என்றால் அவர்களுக்கு தெரியப்படுத்தலாம்.
- உங்களது **<u>பெயரை வெளிப்படுத்தாமல்</u>** நீங்கள் என்ன கூறினீர்கள் என்பதை அவர்களது இணையத்தளத்தில் பிரசுரிக்குமாறு சொல்லலாம்.

**நினைவில் கொள்ளுங்கள்!**
உங்களிடம் யோசனைகள் ஏதேனும் இருந்தால் அவற்றை ரோயல் கமிஷனிடம் **2020 ஜூன் 30ம் திகதிக்கு முன்னதாக** தெரியப்படுத்த வேண்டும்.

அனைத்து ஆஸ்திரேலியர்களுக்குமான முதியோர் பராமரிப்பு சேவையை மேம்படுத்துவதில் உதவிபுரிந்தமைக்கு நன்றி!

FECCA

FECCA National Office
Unit 1, 4 Phipps Close
DEAKIN ACT 2605

PO Box 344
CURTIN ACT 2605

T +61 02 6282 5755
E admin@fecca.org.au

**www.fecca.org.au**